[1981 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கென்ன எல்லோருக்கும் சந்தேகம் வருகிறது (சிரிப்பு) அமைச்சரிடத்திலே நேராக உறுப்பினர்கள் வைத்துக் கொள்வதாக இருந்தால் நான் இங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. சு. பாலன் : குறுகிய கால வினாவிற்கு கையெழுத்து வாங்குகிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறுகிய கால வினாவிற்குக் குறைந்த காலத்தில் விடையளிக்க அமைச்சர் தயாராக இருக்கிறாரா என்பதற்காகத்தான் அமைச்சரிடத்தில் அது காட்டப்பட்டுக் கொடுக்கப்படுகிறது. அமைச்சர் கையெழுத்துப் போட்டால் குறைந்த காலத்தில் விடையளிக்கத் தயார் என்று அதற்குப் பொருள். குறைந்த காலத்தில் முடியா விட்டாலும் 15 நாட்களுக்குள் குறுகிய கால வினா வருவதற்குத் தலைவரவர்கள் அரசுத் துறைக்கு, அமைச்சர்களுக்குச் சொல்லி 15 நாட்களுக்குள் விடையளிக்கும்படி தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, குறுகிய கால வினாக்களை ஆளுங்கட்சியினரும் தருகிறார்கள், எதிர்க்கட்சியினரும் தருகிறார்கள். இன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வருகிறது என்றால், நாளைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வரவேண்டும். ஆனால் அப்படியில்லாமல் ஆளுங்கட்சியினரின் குறுகிய கால வினாதான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரண்டு பக்கங்களையும் சமமாகப் பாவிக்கிறேன்; தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

### 3. அரசினர் சட்டமுன்வடிவு.

### மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10-30]

4. 1980-81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1980—81—ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1980—81-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இப்பேரவையில் வைக்க முன்வருகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூபாய் 458.88 கோடியாகும். இதில் ரூபாய் 210.64 கோடி வருவாய்க் கணக்கிலும் மீதமுள்ள ரூபாய் 248.24 கோடி மூலதன, கடன் கணக்கிலும் உள்ளன. பல்வேறு மானியக் கோரிக்கைகளில் கேட்கப்பட்டுள்ள தொகைகளின் விவரமும் அவற்றிற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கைக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவையான இனங்களுக்கும் சேர்த்து இந்தத் துணை மதிப்பீடுகள் வைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சில முக்கியத் திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படுமளவிற்குப் பருவமழை பொய்த்துவிட்டதால், மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களுக்கு ஏற்பட்டு உள்ள இடர்ப்பாட்டினைப் போக்கவும் குடிதண்ணீர் வழங்கவும் தக்க காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துளைக்கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்